**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணி சிறப்புப் பட்டக் கற்கைப் பரீட்சை, ஆண்டு II**

**முதலாம் அரையாண்டு – இறுதிப் பரீட்சை – 2025**

**LAW 21301 – குற்றவியல் சட்டம் II**

**(2 ¼ மணித்தியாலம்)**

**வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 04**

**இரண்டு (02) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
**(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)**

---

01. பின்வரும் சம்பவங்கள் தொடர்பில் பெரேரா என்பவனால் புரியப்பட்ட குற்றங்களை இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பொருத்தமான ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி ஆராய்க:

(அ) பெரேரா வன்முறையாக சில்வாவின் முகத்தில் தாக்கினான். இதன் விளைவாக, சில்வாவுக்கு அவனது இடது கன்னம் சிவந்து வீக்கம் அடைந்ததோடு அவனது கீழ் உதட்டில் சிறியதொரு வெட்டும் உண்டானது.

(ஆ) உலோகக் கம்பி ஒன்றால் ஆயுதம் ஏந்திய பெரேரா, ஆறுமுகம் என்பவனின் கால்களிலும் பின்புறத்திலும் பல முறை தாக்கினான். அத்தாக்குதலைத் தொடர்ந்து, ஆறுமுகம் தீவிரமான உடல் வலியை அனுபவித்ததுடன் உதவி இல்லாமல் நடக்க முடியாது போனான். வலி மற்றும் காயங்கள் காரணமாக ஆறுமுகம் படுக்கை-ஓய்வுடன் கட்டுப்படுத்தப்பட்டதாக மருத்துவ அறிக்கை ஒன்று உறுதிப்படுத்தியதுடன் இருபத்தைந்து (25) நாட்களுக்கு தச்சனாக தனது அன்றாட வேலையைச் செய்ய முடியாதும் போனது.

(இ) செலுத்தப்படாத வாடகை குறித்த வாக்குவாதமொன்றிற்குப் பின்னர் நீர்கொழும்பிலுள்ள தனியார் தங்குமிட அறையொன்றுக்குள் மனீஷா என்பவளை பெரேரா அடைத்து வைத்தான். அயலவர் தலையீட்டைச் செய்யும் வரை மனீஷா ஏறத்தாழ இரண்டு மணி நேரம் வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

(ஈ) மோதலொன்றில் போது, அக்ரம் என்பவன் மீது பெரேரா தனது கைமுட்டியை (fist) அசைத்து, “நான் உனது முகத்தில் அடிப்பேன்” என்று அச்சுறுத்தினான். அக்ரம், அவன் தாக்கப்படப்போகின்றான் என்று நம்பி, பயமடைந்து உடனடி உடல் ரீதியான தீங்குக்கு அஞ்சினான்.

(உ) குமாரி என்பவளைப் பயமுறுத்த வேண்டுமென்றே பெரேரா தனது "ரெக்ஸ்" எனும் நாயை குமாரி மீது அவளுக்குத் தெரியாமல் குதிக்கத் தூண்டினான். "ரெக்ஸின்" திடீர் மற்றும் ஆக்ரோசமான நடத்தையால் பயமடைந்து அச்சுறுத்தப்பட்டதாக குமாரி உணர்ந்தாள்.

(5x6=30 புள்ளிகள்)

02. (அ) மற்றும் (ஆ) ஆகியவற்றுக்கு விடை தருக.

(அ) பதினெட்டு (18) வயது இளைஞனான சகுன என்பவன், பதினைந்து (15) வயது பெண் பிள்ளையான சேத்தனாவுடன் காதல் உறவிலிருந்தான். தமது உறவின் போது, இருவரும் பல சந்தர்ப்பங்களில் ஒத்திணக்கமிக்க பாலியல் உறவில் ஈடுபட்டனர். இதைக் கண்டறிந்ததும், பதினெட்டு வயதுக்குட்பட்ட ஒரு பெண் மீது பாலியல் வன்புணர்வு தொடர்பான குற்றச்சாட்டுக்களின் சேத்தானாவின் பெற்றோர் பொலிஸிடம் முறைப்பாடு செய்ததுடன் அது சகுனவின் கைதுக்கு வழிவகுத்தது. பொலிஸாரின் புலன் விசாரணையின் போது, தனது முழுச் சம்மதத்துடனே பாலியல் செயல்கள் நடந்ததாக சேத்தானா கூறினாள்.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் சகுனவால் புரியப்பட்டுள்ள குற்றங்களை ஆராய்ந்து, உமது விடையை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களினால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

(ஆ) சந்தீப் என்பவனும் பிரதீப் என்பவனும் ஒரே பாலின உறவில் ஈடுபட்டதோடு, பொது வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த சந்தீப்பின் காருக்குள் முத்தமிடுவதைக் காண முடிந்தது. அவர்கள் வாகனத்தில் இருந்தபோது, அவர்களை அணுகிய பொலிஸ், நபர்களிடையே கடுமையான ஒழுங்கீனச் செயல்களைச் செய்ததன் பேரில் அவர்களைக் கைது செய்தனர். தனிப்பட்ட இடம் அல்லது தனியார் வாழ்க்கையில் தலையிட பொலிசுக்கு அதிகாரம் இல்லை என்று வாதிட்டு, சந்தீப் மற்றும் பிரதீப் ஆகியோர் அக்கைதினை ஆட்சேபனைக்குட்படுத்தினர்.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் சந்தீப் என்பவனும் பிரதீப் என்பவனும் ஏதேனும் குற்றத்தைப் புரிந்துள்ளனரா? விடையானது பொருத்தமான தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(10 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 30)

03. ரங்கா என்பவன் கொழும்பிலுள்ள புகழ்பெற்ற நகைக் கடையான லட்சுமி மஹாலின் முகாமையாளராக உள்ளான். அவன் கடையின் பிரதான பெட்டகத்தின் திறப்புகளுக்கு பொறுப்பாளனாக இருந்துவருவதோடு அனைத்து தினசரி நிதிப் பதிவுகளுக்கும் அணுகலைக் கொண்டிருக்கின்றான். கடையின் உரிமையாளானான பெரேரா என்பவன், கடந்த மூன்று மாதங்களில் தங்கச் சங்கிலிகளின் இருப்புக்களின் பல முரண்பாடுகளைக் கவனித்தான். விசாரணையின் போது, சில சங்கிலிகள் பழுதுபார்க்க அனுப்பப்பட்டதாகவும் மற்றவை விற்கப்பட்டதாகவும் ரங்கா கூறியபோதும் அவன் எந்தப் பற்றுச்சீட்டுக்களையும் வழங்கத் தவறினான். ரங்கா தங்கச் சங்கிலிகளுக்கு பதிலாக நகல் சங்கிலிகளை மாற்றுவதன் மூலம் பெட்டகத்திலிருந்து தங்கச் சங்கிலிகளை இரகசியமாக அகற்றியதுடன் அவற்றை உள்ளூர் அடகுத் தரகரான திலான் என்பவனிடம் தனது தனிப்பட்ட தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி அடகு வைத்தான். அவன் தனது நிதி நிலைமை மேம்பட்ட சில மாதங்களுக்குப் பிறகு அவற்றை மீட்டிக்கொள்ள விரும்பினான். இருப்பினும், இச்செயல்களை அவன் ஒருபோதும் பெரேராவுக்கு தெரிவிக்கவில்லை.

ஒரு நாள், கடையை மூடும்போது, மூடிய-மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) செயலிழந்ததை ரங்கா கவனித்தான். இதனைச் சாதகமாக ஆக்கிக்கொண்டு, ரங்கவும் அவனது நண்பன் சஞ்சீவ என்பவனும் ஒரு பொம்மைத் துப்பாக்கியுடன் வந்து முகமூடிகளுடன் ஆயுதமேந்தியவர் ஒருவர் போல நடித்து, பெரேராவை உடனடி மரணத்திற்கு பயமுறுத்தி, ரூபா ஐந்து மில்லியன் பெறுமதியான பணத்தையும் நகைகளையும் எடுத்தனர். அதன்பிறகு, சுயநினைவற்ற நிலையிலிருந்த பெரேராவுக்கு மருத்துவச் சிகிச்சை வழங்கப்பட்ட அதேநேரம், ரங்கா தானும் கடையில் தடுத்து வைக்கப்பட்டு அதே நேரத்தில் கொள்ளையர்களால் தாக்கப்பட்டதாகக் கூறி போலியான பொலிஸ் முறைப்பாடொன்றைச் செய்தான்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, பொலிஸ் குற்றத்தை தொலைபேசி பதிவுகள் மூலம் கண்டுபிடித்து, நகைகளின் ஒரு பகுதியை சஞ்சீவவின் வீட்டிலிருந்து மீட்டனர். அத்தோடு திலான் என்பவன் அவற்றின் மூலத்தை சரிபார்க்காமல் ரங்காவிடமிருந்து தங்கச் சங்கிலிகள் பலவற்றை ஏற்றுக்~~கொண்தம்மை~~யும் கொண்டமையும் பின்னர் அவற்றில் சிலவற்றுக்கு (தானே) உரிமை கோரி மறுவிற்பனை செய்துள்ளமையும் கண்டறியப்பட்டது.

ரங்கா, சஞ்சீவ மற்றும் திலான் என்போரால் புரியப்பட்ட குற்றங்களை இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் ஆராய்க. உமது விடை பொருத்தமான தீர்ப்புச் சட்டங்கள் மூலமாக ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(30 புள்ளிகள்)

04. *“குற்றவியல் சட்டமானது மனித உடலின் புனிதத்தன்மை மற்றும் சொத்தின் பாதுகாப்பு ஆகிய இரண்டையும் பாதுகாக்க முயல்கின்றது. நபரின் உடலுக்கு எதிரான குற்றங்களுக்கும் சொத்துக்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் இடையிலான எல்லைகள் எப்போதும் கடினமானவையல்ல, அத்ததுடன் இரு வகையான தீங்கும் ஒரே நேரத்தில் உண்டாகக்கூடிய சூழ்நிலைகளே பெரும்பாலும் எழுகின்றன.”*

மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் பொருத்தமான ஏற்பாடுகளின் பின்னணியில் ஆராய்க. உமது விடையில், அத்தகைய தவறுகளுக்கு அடிப்படையான சட்டக் கொள்கைகளை மேற்கோள்காட்டி, தீர்க்கப்பட்ட வழக்குகளையும் உமது சொந்த உதாரணங்களையும் பொருத்தமான இடங்களில் எடுத்துக்காட்டுக.

(30 புள்ளிகள்)

*****